3 அறிவிப்பு.

நன்செய்த் தீர்வை, கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி நன்செய்த் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்

அ. கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி நன்செய்த் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி நன்செய்த் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

ஆ. வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை" பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.